வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | கிறிஸ்தவ நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி – I

| | | | | |
|---|---|---|---|---|
| *1) 3* | *11) 3* | *21) 5* | *31) 5* | *41) 1* |
| *2) 1* | *12) 2* | *22) 2* | *32) 1* | *42) 3* |
| *3) 4* | *13) 2* | *23) 2* | *33) 4* | *43) 4* |
| *4) 4* | *14) 1* | *24) 1* | *34) 3* | *44) 2* |
| *5) 1* | *15) 5* | *25) 4* | *35) 1* | *45) 4* |
| *6) 5* | *16) 2* | *26) 4* | *36) 5* | *46) 2* |
| *7) 4* | *17) 1* | *27) 5* | *37) 2* | *47) 3* |
| *8) 1* | *18) 3* | *28) 3* | *38) 2* | *48) 4* |
| *9) 2* | *19) 1* | *29) 1* | *39) 1* | *49) 3* |
| *10) 4* | *20) 2* | *30) 2* | *40) 5* | *50) 5* |

**(50x2=100 புள்ளிகள்)**

agaram.lk

### பகுதி – II

*1)* i.

- கிரேக்க மெய்யியல் சிந்தனைகளில் அடிப்படையில் விளக்கங்களைக் கொடுத்தனர்.
- இயேசுவினுடைய இறை இயல்புக்கு முக்கியத்துவம் கொடுத்து போதித்தனர்.
- இவர்கள் இறையியலை விளக்க பிளேற்ரோவின் மெய்யியல் சிந்தனையை பயன்படுத்தினர்.
- திருவிவிலியத்திற்கு விளக்கமளிக்க உருவக முறையை பயன்படுத்தினர்.
- வாக்கு மனிதரானார். நம்மிடையே குடிகொண்டவர் என்பது இவருடைய தத்துவக் கோட்பாடாகும்.

ii) அலெக்சாந்திரியா கிளமென்ற் - கிரேக்கருக்கு அறிவுரை
ஒரிஜின் - கிறிஸ்து வேத ஆதாரம்
ஐஸ்ரின் - அப்லோயியா
இரனியுஸ் - பேதகமறுப்பு

iii)

- அந்தியோக்கியா மறைக்கல்வி கூடத்திலே இது உருவாக்கப்பட்டது.
- இதனை உருவாக்கியவர். லூசியன் ஆவார்.

- வார்த்தை கடவுளினும் கீழானவர். என்பதே இத்தப்பறையின் மையக்கருத்து ஆகும்.
- மகன் தந்தைக்கு சமமானவர் அல்ல, ஒரே பொருளானவர் அல்ல, நித்தியமானவரல்ல.
- இத்தப்பறையின் ஆதரித்தவருள் முக்கியமானவர் குருவான ஆரியூஸ் என்பவர் ஆவார்.

iv)

- ஐரோப்பிய பழங்குடி மக்களை மனந்திரும்பி, நாகரிகப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டனர்.
- சுயநலம் பாராமல் பிறர் நலப் பணிகளில் ஈடுபட்டனர்.
- நோயாளிகள், வயோதிபர்கள், சிறுவர்களுக்காக தமது பணிகளை செலவிட்டமை.
- கைத்தொழில் செய்வதில் மக்களுக்கு முன்மாதிரியாக இருந்து தொழிலின் மகத்துவத்திற்கு புத்துயிர் கொடுத்தமை.
  இவர்களது முன்மாதிரிகையான உடல், உழைப்பு ஐரோப்பிய நாகரிக வளர்ச்சியடைவதற்கு அளப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

v)

- கி.பி 11ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி.
- மத்திய தரைக்கடல் வர்க்கத்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி.
- இத்தாலிய வர்த்தக நாகரிகங்களின் எழுச்சி.
- கப்பல் கட்டும் துறையில் ஏற்பட்ட அபிவிருத்தி.
- எருசலேம் நகரம் பல காரணங்களால் முக்கியத்துவம் பெற்றிருந்தமை.
- இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த செலீஜீக் துருக்கியரின் ஆதிக்கத்தால் தீவிர முஸ்லிம் எதிர்ப்புணர்வு கிறிஸ்தவர்களிடையே ஏற்பட வழிவகுத்தமை.

(5x4=20 புள்ளிகள்)

2) i)

1) யூதர்களின் சமய, சமூக ஒருமைப்பாட்டின் மையமாக விளங்கிய எருசலேம் ஆலயத்திலே அவர்களது வாழ்வியல் நிகழ்வுகள் அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டன.
2) ஒவ்வொரு யூதர்களுக்கும் குழந்தையை இறைவனுக்கு காணிக்கையாக்குவதும் விழாக்களில் பங்குபற்றி பலி நிறைவேற்றுவதும், கட்டாய கடமையாக காணப்பட்டது.
3) ஒவ்வொரு யூதனும் ஆலயத்துக்கு வரி செலுத்துவதை தமது உரிமையாகக் கொண்டிருந்தனர்.
4) இவ்வாலயம் கி.பி 70 ல் உரோமைப் பேரரசன் தீத்துஸ் என்பவரால் முற்றாக அளிக்கப்பட்டது. ஆனால் மேற்கு மதில் மட்டுமே இன்று அதன் அடையாளச்சின்னமாக உள்ளது. யூதர்கள் அதனை கண்ணீர்ச்சுவர் என அழைப்பார்.

ii)

1) இயேசு சீடர்களின் பாதங்களை கழுவி இறையாட்சி பணி எத்தகையது என்பதற்கு முன்மாதிரிகை தந்தார்.
2) இறையாட்சி பணி இறையன்பை வெளிப்படுத்தும் செயற்பாடாக அமைய வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார்.
3) இயேசுவின் தலைமைத்துவம் தாழ்மையான பணி தலைமைத்துவம் என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.
4) இறையாட்சி பணிக்கு வேண்டிய உளத்தூய்மை பற்றி விளக்கி அவரது வார்த்தைகளால் சீடர்கள் தூய்மை அடைய வேண்டு என கற்பித்தார்.

agaram.lk

iii)

1) நகரைப் பாதுகாத்தல்
2) வரி வசூலிப்பவர்களுக்கு உதவி செய்தல்.
3) குற்றவாளிகளைக் கைது செய்து தண்டனை வழங்கல்
4) விழாக் காலங்களில் கண்காணிப்பு மேற் கொள்ளல்.
5) உரோமைக்குரிய நிதியை கொண்டு செல்லல் போன்ற பணிகளை மேற்கொண்டனர்.

iv)

1) தனி உடமையாக எதையும் இவர்கள் உரிமையாக்கிக் கொள்ளவில்லை.
2) தம் வாழ்க்கையாலும், வார்த்தையாலும் மக்களுக்குப் போதனை செய்து அவர்களை மனம் திருப்புதல்.
3) நாளாந்த தேவைகளை வீடு வீடாகச் சென்று இரந்து பெற்றுக்கொண்டனர்.
4) இவர்கள் ஏழ்மை, செபம், தவம், தூய்மை போன்ற இயேசுவின் விழுமியங்களில் வாழ்ந்தமை.
5) இவர்கள் உலகத்தில் இருந்து கொண்டே உலகத்தை துறந்த பற்றற்ற வாழ்வே வாழ்ந்தனர்.
6) லௌகீக இன்பங்களை விடுத்து ஆன்மீக இன்பங்களை சேர்த்துக் கொண்டனர்.

v)

1) இவர் ஜேர்மனியைச் சேர்ந்த இறையியலாலும் புரட்டஸ்தாந்து சீர்திருத்த முன்னேற்றத்தை தொடங்கியவர்.
2) இவர் விசுவாசத்திற்கு திருவிவிலியம் மட்டும் போதுமானது என போதித்து வந்தார்.
3) தூய பவுலின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் நம்பிக்கையால் மட்டும் மீட்பு பெற முடியும் எனப்போதித்தார்
4) குருத்துவ, ஆயர் பணிகள் தேவையில்லை எனப்பணித்தார்.
5) திருச்சபையின் பரிபூரண பலன், உத்தரிப்புஸ்தலம், புனிதர்கள் என்பவற்றிற்கு எதிராகப் போதித்தார்.

(5x4=20 புள்ளிகள்)

3) i) இயேசு சபை
கார்மேல் சபை
கப்புச்சின் சபை
வின்சென்சியன் சபை

ii) சும்மா கொன்தரா ஜென்திவஸ்
சும்மா தியலொஜியோ
பாஞ்ஞே லிங்குவா
வேர்பும் சுபபோனும்
சாந்நிஸ் சொலெம்பினியிஸ்
அக்டோறோ தே

iii)

1) இது கி.பி 500 – 1000 ஆண்டு காலப்பகுதியில் காணப்பட்டது.
2) இவ் இசை முறையை தூய பெனடிற் துறவற சபையினர் பின்பற்றி வந்தனர்.
3) திருத்தந்தை முதலாம் கிரகோரி இதனை கிறிஸ்தவ வழிபாடுகளிலும் சடங்குகளிலும் பயன்படுத்தும் படி கூறினர்.
4) இது அதிகார பூர்வமானதும் அதிசிறந்த இசை அமைப்பாகவும் இருந்தது.

agaram.lk

iv)

1) அரைவட்ட முகப்புக்களுக்கு பதிலாக கூரையான முகப்புக்கொண்டு காணப்பட்டது.
2) கட்டடக்கலை கலைஞர் முதலில் மேல் தட்டை அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.
3) கூரான முகப்பும் பூ வடிவான யன்னலும் இவ்வாலயத்தில் சிறப்பாகும்.
4) இது உரோமைய ஆலயத்தைப் போன்று இது இரண்டு வரிசைத்தூண்களைக் கொண்டது.

v)

1) மீன் - கிறிஸ்து
புறா – ஆன்மா
மயில் - நித்தியகாலம்
கழுத்தில் ஆட்டை வைத்திருக்கும் இளைஞன் - நல்ல ஆயன்
கையை உயர்த்திய வண்ணம் உள்ள மனிதன் - செபத்தில் இறைவனோடு உறவு கொள்வது

(5x4=20 புள்ளிகள்)

## பகுதி – II

4) i) அ)

- யூதர்கள் பவுலை ஏற்க மறுத்தமை.
- பவுலுடையே அழைப்பே அவருக்கு சவாலாக மாறியது.
- கால்நடையாக தமது பணிகளை மேற்கொண்டார்.
- சிறையில் அடைக்கப்பட்டார்.
- பயணங்களின் போது அவருக்கு ஏற்பட்ட தடங்கல்கள்
- தீய ஆவி பிடித்தவர்களைக் குணமாக்கும் போது ஏற்பட்ட சவால்கள்
இது போன்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் விடையளித்திருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

agaram.lk

ஆ)

- தூய ஆவியின் வழிநடத்துதலை பெற்றுக்கொண்டார்.
- சவால்களை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டமை.
- தாய் சபையுடன் தொடர்புகளை பேணல்.
- சட்டம், கிரேக்க சிந்தனைகள், அறிவியல் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினார்.
- துணிவுடன் செயற்பட்டமை
- தானே உழைத்து வேலை செய்து பணியாற்றியமை
- சிறையில் இருந்தாலும் கிறிஸ்தவ சபைகளை விசுவாசத்தில் உறுதிப்படுத்த நூல்களை எழுதி வெளியிட்டமை
- பொது நிலையினரின் ஒத்துழைப்புடன் பணியாற்றியமை
- தமக்கு கொடுக்கப்பட்ட பணியை எவ்வித இடையூறு மத்தியிலும் அதனை செவ்வனே நிறைவு செய்து கிறிஸ்துவுக்கு சாட்சியாக மரித்தமை

இதுபோன்ற கருத்துக்களை உள்ளடக்கியதாக மாணவரின் விடையமைந்திருப்பின் புள்ளி வழங்கவும்.

(2x10=20 புள்ளிகள்)

*5)* **அ)**

**குடும்பம்**

- யூத குடும்பத்தில் தலைமை என்பது இல்லத்தலைவனே ஆகும்.
- தந்தையே முழு அதிகாரத்தையும் கொண்டார்.
- திருமணம் முடிந்தாலும் பிள்ளைகள் தமது தந்தைக்கு கட்டுபட்டு இருந்தனர்.
- யூத குடும்பத்தில் குழந்தைப்பேறு ஆசிராக கருதப்பட்டது.
- குழந்தை பிறந்தும் 8ம் நாளில் / 40 நாட்களுக்குள் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்.

**திருமணம்**

- ஒரு யூத ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வாழ்வே சிறந்த இலட்சியமென யூதர்கள் கருதினர்.
- இதனால் ஆண் 13 வயதிலும் பெண் 12ம் வயதிலும் திருமணம் செய்ய அனுமதி இருந்தது.
- பெற்றோர்களே தமது பிள்ளைகளுக்கு மணமக்களைத் தேடி மணமுடித்து வைப்பர்
- திருமண ஒப்பந்தம் செய்து ஒரு வருடத்தின் பின்னர் திருமணம் நடக்கும்.
- திருமணத்தின் பின்னர் தனிக்குடித்தனம் நடத்தினர்.

ஆ)

- இறைவனை தேடுவதற்கான நேரங்கள், காலங்களை ஒதுக்காமை.
- பொழுது போக்கு, கேளிக்கை அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- நவீன உலகியல் போக்குகள் / தேடல்கள்
- நுகர்வு கலாசாரம்
- பெற்றோர், பிள்ளைகள் மட்டில் உறவின் விரிசல்கள்.
- கடவுள் நம்பிக்கையற்ற வாழ்வும் இவ் உலகியல் செல்வங்கள் மீது கொண்ட பற்றும். இது போன்ற கருத்துகளின் அடிப்படையில் விடையளித்திருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

(2x10=20 *புள்ளிகள்)*

agaram.lk

*6)*

அ) லூத்தரன் சபை, கல்வினின் சபை, அங்கிலிகன் சபை

- லூதர் புரட்டஸ்தாந்து சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்து உரோமையில் நிலவிய திருச்சபையின் ஊழல்களுக்கு எதிராக தனது சிந்தனைகளை முன்வைத்தவர்.
- திருச்சபையின் போதனைகளுக்கு எதிராக கி.பி 1521 இல் திருச்சபையில் இருந்து வெளியேறினார். திருச்சபையின் முறையற்ற செயற்பாடுகளுக்கு எதிராக 95 கோட்பாடுகளை முன்வைத்தார்.
- ஒருவர் நம்பிக்கையால் மட்டுமே மீட்படைய முடியும் என்பதை இவர் வலியுறுத்திப் போதித்தார்.
- மேலும் திருச்சபையின் போதனைகளுக்கு திருவிவிலியம் மட்டுமே போதுமானது எனக் கூறினார்.
- அருளடையாளங்கள் 7 இணையும் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை.
- குருத்துவ, ஆயர்ப்பணிகள் தேவையற்றது எனப் போதித்தார்.
- திருச்சபையின் பரிபூரண பலன், உத்தரிப்பு ஸ்தலம், திருச்சபையின் வழுவா வரம், புனிதர்கள் என்பவற்றுக்கு எதிராகப் போதித்தார்.

ஆ) திருத்தந்தை 3 வது பவுல் கி.பி 1545ம் ஆண்டு இத்தாலியிலே இப்பொதுச்சங்கத்தை ஆரம்பித்தார்.

- திருத்தந்தை 4 வது பயஸ் கி.பி 1563 இல் இச் சங்கத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.
- கிறிஸ்தவ மறைக்கோட்பாடுகள் குருத்துவ வாழ்வு சீர்திருத்தங்கள் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் இச்சங்கம் செயற்பட்டது.
- விவிலியம், பாரம்பரியம் இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று என கூறப்பட்டது. அதாவது இலத்தீன் மொழி பெயர்ப்பே திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட விவிலிய மொழி பெயர்ப்பு என எடுத்துரைக்கப்பட்டது.
- மனிதனுடைய மீட்பு நம்பிக்கையினால் மட்டுமல்ல எதிர்நோக்கு அன்பினாலும் இடம் பெறுகிறது.
- திருத்தந்தை தவறா வரம் பெற்றவர் என எடுத்துரைக்கப்பட்டது.
- திருச்சபையின் கருதினால் குழுவினாலே அனைத்துலக உறுப்பினர்களுக்கும் பதவி அளிக்க வேண்டும்.
- ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களிலே பணிபுரிய வேண்டும்.
- குருத்துவப்பயிற்சி கல்லூரிகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்.

(2x10=20 *புள்ளிகள்)*

7) அ)

- 3ம், 4ம் நூற்றாண்டுகளில் உரோமைப் பேரரசில் நிலவிய வேதகலாபனைகள், வாதங்கள், சிலை வழிபாடு ஐரோப்பிய பழங்குடிகளின் படைபெயடுப்புக்களால் ஒழுக்க வாழ்வில் சீர்கேடுகள் தோன்றிய வேளையில் துறவற வாழ்வில் அவசியம் உணரப்பட்டது.
- கிறிஸ்தவ தூய்மைத்தன்மை முன்மாதிரியாக வாழ சிலர் முன்வந்தனர்.
- அவர்கள் தபோதனர்களாக, ஏகாந்திகளாக, துறவற குழுக்களாக, துறவற பொது வாழ்வில் ஈடுபட்டு கிறிஸ்துவை முன்மாதிரியாகக் கொண்டு திருமுழுக்கு யோவான் எலியாவை பின்பற்றி வாழ்ந்து வந்தனர்.
- இத்தகைய துறவற வாழ்வு காலப்போக்கிலே மேலைத்தேசத்திலும் கீழைத்தேசத்திலும் பரவலாயிற்று.
- முதல் துறவியாக தேப்ஸ் சின்னப்பரும் துறவற வாழ்வின் நிறுவனராக வனத்து அந்தோனியாரும் கருதப்படுகின்றார்.
- தூய்பக்கோமியுஸ் துறவற குழுவை ஆரம்பித்தார். தூய பசில், தூய பெனடிக்ற் துறவறவாழ்வில் சட்டங்களை எழுதினார்.
- இது ஐரோப்பாவிலும் ஏனைய இடங்களுக்கும் பரவியது.

ஆ)

- நவீன உலகியல் போக்கின் தேடல்கள்
- ஆன்மீக வாழ்வின் நாட்டம் குறைவடைதல்.
- இளையோர் உருவாக்கத்தில் அக்கறையின்மை
- இளையோரின் நெறி பிறழ்வுகள்
- குடும்பங்களின் சீர்குழைந்த வாழ்வியல் முறை
- நவீன ஊடகங்களின் தவறான பரப்புரைகள்
- பெற்றோர் உலகியல் போக்குக்கேற்ப பிள்ளைகளை ஈடுபடுத்தல்
- மக்கட்பேறு குறைவடைதல்

போன்ற விடயங்களை உள்ளடக்கிய மாணவர்களின் விடைகளுக்கு புள்ளிகளை வழங்கவும்.

(2x10=20 புள்ளிகள்)

agaram.lk

8) அ)

- நவீன உலகின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியில் கிறிஸ்தவ விஞ்ஞானிகளான அருட்பணி ரொயார்டேசார்டேன், அலெக்சாந்தரகிரகம்பெல், ஐசக்நியூட்டன், அல்பிரட் ஐன்ஸ்டின், அலெக்சாந்தர் பிளமின் என்பவர்கள் முக்கியமானவர்கள்.
- இவர்கள் அடுத்து வரும் சந்ததிக்கு பல விஞ்ஞான கண்டுபிடிப்புக்களையும், பயன்பாட்டுக் கருவிகளையும் கண்டறிந்துள்ளன.
- பல புதிய விஞ்ஞானிகளையும் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டுள்ளனர்.
- இறைவன் கொடுத்த ஆற்றல் திறமைகளைப் பயன்படுத்தி படைப்புக்களை அழகுபடுத்த புதுப்பிக்க தமது செயற்பாடுகளை முன் வைத்தமை.
- மருத்துவத்துறை, கணனித்துறை விவசாயத்துறை, வானிலைத்துறை, அறிவியல்த்துறைகளில் இயற்கைக்கு ஒத்துழைக்கும் வகையில் தமது செயற்பாடுகளை முன்வைத்தமை.
- திருவிவிலியம், விஞ்ஞானம் பற்றிய கற்கை நெறிகளை பயின்று திருவிவிலியத்தில் உள்ளவற்றினை விஞ்ஞானத்தரவுகளுக்கூடாக ஆய்வு செய்தனர்.
- அறிவியல் தேடல்களுக்கும், நல்ல சிந்தனைகளுக்கும் ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளுக்கும் முன் மாதிரியாக விளங்கியமை.

ஆ) இறைவனின் படைப்பில் மனிதர்கள் தனியாள் வேறுபாடுகளும் வேறுபட்ட ஆளுமைப்பண்புகளையும் கொண்டவர்கள் தமக்கே உரித்தான விசேட ஆற்றல்கள் திறமைகளை இனங்கண்டு அவற்றினை வளர்த்தெடுக்க முன்வருதல்.

- ஆற்றல்கள் திறமைகளை சமூதாய நலன்களுக்காக பகிருதல், பயன்படுத்துதல்.
- சுயநலத்தை விடுத்து பிற நலத்தில் அக்கறை செலுத்துதல்.
- எம்பிரதேசத்தில் உள்ள வளங்களை எம் அறிவியலைக் கொண்டு புத்தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- சமுதாயத்தினை அழகுபடுத்தவும், புதுப்படைப்பாக மாற்றவும் செயற்படுதல்.
- நவீனத்துவ துறைகளை இனங்கண்டு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முன்னேற்றம் காணச்செய்தல்.
- சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சிக்காக ஆக்கப்பூர்வமான சிந்தனைகளையும், தூர நோக்குடைய இலக்குகளையும் முன்வைத்தல்.

  போன்ற மாணவர்களின் விடைகளுக்கேற்ப புள்ளிகள் வழங்கவும்

(2x10=20 புள்ளிகள்)

agaram.lk